பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
“மொழிகள் பல; உணர்வு ஒன்றே”

பயிலரங்கம் - 12

நாள்: 30.10.2023

# அண்டை மொழிகளை அறிந்துகொள்ளுதல்

# Learning about Neighbouring Languages

(15.11.2023 - 24.11.2023)

## அறிவிப்பும் அழைப்பும்

உலகில் ஏறத்தாழ 6500 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் இந்தியாவில் மட்டும் 3000க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இந்திய மொழிகளின், 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, பெரும்பான்மையான மக்களால் பேசக்கூடிய மொழிகளாக 121 மொழிகளும் தாய்மொழிகளாக 270 மொழிகளும் உள்ளன எனக் கண்டறியப்பட்டுள்ளது. இவற்றுள் இந்திய அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் 22 மொழிகள் இடம்பெற்றுள்ளன.

இந்திய மொழிகளை, இந்தோ - ஆரியன், திராவிடன், திபொத்தோ - பர்மன், ஆஸ்த்தோ - ஆசியாடிக், அந்தமானிஸ் என ஐந்து மொழிக் குடும்பங்களாகப் பகுக்கின்றனர். இக்குடும்பத்தில் தென்னிந்திய மொழிகளுக்குத் தமிழ் மொழி முதன்மையாக உள்ளது. செம்மொழிகளுள் மிகவும் பழமையானதும் உயர்தனிச் செம்மொழியாகவும் திகழ்வது தமிழ் மொழியாகும். தமிழின் அண்டை மொழிகளாகத் தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, படுகா, கொரகா, கொடவா, எரவள்ளா, இருளா, காடா, காணிக்காரா, காட்டுநாயக்கா, குறும்பா, பணியா, சோளநாயக்கா, தோடா, ஊராளி, நரிக்குறவா, முதுவா, சவுராஸ்ட்ரா உள்ளிட்ட மொழிகள் இருந்து வருகின்றன.

இம்மொழிகளுக்குரிய இலக்கிய உறவுகள், இலக்கண மரபுகள், பண்பாட்டுக் கூறுகள் உள்ளிட்ட பொதுமைக்கூறுகளை மையப்படுத்தி “அண்டை மொழிகளை அறிந்துகொள்ளுதல்” என்னும் பொருண்மையில் இப்பயிலரங்கம் நடைபெறவுள்ளது. இப்பயிலரங்கில் மொழிசார் புலமைமிக்க வல்லுநர்கள் பயிற்சியளிக்க உள்ளனர். எனவே, தமிழ், மொழியியல், வரலாறு மற்றும் சமூகவியல் துறைசார்ந்த ஆய்வு மாணவர்கள்

இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழி நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகள், விவரங்கள் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை: 30
2. பயிலரங்கம் நடைபெறும் நாட்கள்: 15.11.2023 முதல் 24.11.2023 முடிய பத்து நாட்கள்
3. பயிலரங்கம் நடைபெறும் நேரம்: காலை 10.00 – 1.00 & மாலை 2.00 – 5.00.
4. மத்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் தினப்படியும் வழங்கப்படும்.
5. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopling@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும்.
8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/ புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
11. விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதுநாள் 08.11.2023. இதற்குப் பின்வரும் வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கபட்டவர்களுக்கு 08.11.2023 அன்று மின்னஞ்சல் / புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.
13. இப்பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்பட மாட்டா.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

सत्यमेव जयते

பாரத மொழிகளின் திருவிழா
(28.09.2023-11.12.2023)
"மொழிகள் பல; உணர்வு ஒன்றே"

## பயிலரங்கம் – 12

## அண்டை மொழிகளை அறிந்துகொள்ளுதல்

## Learning about Neighbouring Languages

(15.11.2023 - 24.11.2023)

### விண்ணப்பப் படிவம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பெயர்\| Name | தமிழ் | | | | | நிழற்படம்/ Photo |
| | | English | | | | | |
| 2. | பிறந்த நாள் / வயது Date of Birth/ Age | | | | | | |
| 3. | பாலினம் \| Gender (✓) | ஆண்/ Male | | பெண்/ Female | | திருநங்கை/ Transgender | |
| 4. | வகுப்பு \| Class (✓) | | பொது/ General | | இ.பி.வ.\| OBC | | பட்டியல் இனம் \| SC/ ST |
| 5. | கல்வித் தகுதி \| Educational Qualification | | | | | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு \| Date of Joining & year in M. Phil & Ph.D. | முழுநேரம் | | | | | |
| | | பகுதிநேரம் | | | | | |
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு \| M. Phil & Ph.D. Research Topic | | | | | | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்) \| University / College/Institute Address (Contact number & Email) | | | | | | |

| | | |
|---|---|---|
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண் \|Residential address & Contact number | |
| 10 | புலன எண் \| WhatsApp number | |
| 11 | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் \| Yes<br>இல்லை\| No |
| | | |

(கையொப்பம்)

நெறியாளர் /துறைத் தலைவர்/

முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்

இடம்:

நாள்: